# 2. அறநூல் தொடர்பான செய்திகள்

**நாலடியார், நான்மணிக்கடிகை, பழமொழி நானூறு, முதுமொழிக்காஞ்சி, திரிகடுகம், இன்னாநாற்பது, சிறுபஞ்சமூலம், ஏலாதி, அவ்வையார் பாடல்கள்**

**நாலடியார்**

**புதுசு** — **அழியாச் செல்வம்**
ஏழாம் வகுப்பு - செய்யுள்

**நாலடியார்**

- சமண முனிவர்கள் பலரால் எழுதப்பட்ட நூலாகும்.
- இந்நூல் **பதினெண்கீழ்க்கணக்கு** நூல்களுள் ஒன்றாகும்.
- இது நானூறு வெண்பாக்களால் ஆனது.
- இந்நூலை **நாலடி நானூறு** என்றும், **வேளாண்வேதம்** என்றும் அழைப்பர்.
- திருக்குறள் போன்றே **அறம், பொருள், இன்பம்** என்னும் முப்பால் பகுப்புக் கொண்டது.
- இந்நூல் திருக்குறளுக்கு இணையாக வைத்துப் போற்றப்படுவதை **நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி** என்னும் தொடர் மூலம் அறியலாம்.

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

பின்வருவனவற்றில் பொருந்தாததைத் தேர்வு செய்க
(EO3GT-2019)
அ) நாலடியாரில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூன்று பகுப்புகள் உள்ளன
ஆ) **நாலடியாரை இயற்றியவர் நல்லாதனார்**
இ) நாலடியாரில் 400 வெண்பாக்கள் உள்ளன
ஈ) "நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி" என்பதில் நாலு என்பது நாலடியாரைக் குறிக்கும்

நாலடியார் - நூலின் ஆசிரியர் (EO4GT-2017)
அ) வள்ளுவர் ஆ) சுந்தரர்
இ) விளம்பி நாகனார் ஈ) **சமண முனிவர்**

**நாலடியார்**
**- சமண முனிவர்**

வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்
எச்சம் எனவொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற்று அல்ல பிற.

**பாடலின் பொருள்**

கல்வியைப் பொருள் போல வைத்திருப்பினும் அது பிறரால் கொள்ளப்படாது. ஒருவற்கு வாய்க்கும்படி கொடுத்தாலும் குறைவுபடாது. மிக்க சிறப்பினை உடைய அரசராலும் கவர முடியாது. ஆதலால் ஒருவர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வம் கல்வியே ஆகும். மற்றவை செல்வம் ஆகா.

**புதுசு** — **நாலடியார்**
எட்டாம் வகுப்பு

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல - தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து.
- நாலடியார்

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

கல்வி அழகே அழகு' என்றும்;
'கல்வி கரையில கற்பவர் நாள் சில' என்றும் கூறும் நூல்
(CCS2T-2022)
அ) திருக்குறள் ஆ) நான்மணிக்கடிகை
இ) திரிகடுகம் ஈ) நாலடியார்
உ) விடை தெரியவில்லை

**பழசு** — **நாலடியார்**
ஆறாம் வகுப்பு - செய்யுள்

**நாலடியார்**

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று நாலடியார். இந்நூல், நானூறு பாடல்களைக் கொண்டது. அறக்கருத்துகளைக் கூறுவது. 'நாலடி நானூறு' என்னும் சிறப்புப் பெயரும் இதற்கு உண்டு. இந்நூல், சமணமுனிவர் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பு.

## TNPSC Old Questions
## பொதுத்தமிழ்

...யார் - எனும் நூலைப் பாடியவர்கள் யார்? (JGT-19)
...சமண முனிவர் ஆ) வைணவர்கள்
...புலவர்கள் ஈ) பௌத்தத் துறவிகள்

### பதினெண்கீழ்க்கணக்கு - விளக்கம்

பதினெண்மேல்கணக்கு எனப்படுபவை பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும். பத்துப்பாட்டில் பத்து நூல்களும் எட்டுத்தொகையில் எட்டு நூல்களுமாக மொத்தம் பதினெட்டு நூல்கள். இவற்றை 'மேல்கணக்கு நூல்கள்' என்று கூறுவர்.

சங்க நூல்களுக்குப்பின் தோன்றிய நூல்களின் தொகுப்பு 'பதினெண்கீழ்க்கணக்கு' என வழங்கப்படுகிறது. இத்தொகுப்பிலும் பதினெட்டு நூல்கள் உள்ளன. பதினெண் என்றால், பதினெட்டு என்பது பொருள். இந்நூல்களைக் கீழ்க்கணக்கு நூல்கள் எனவும் கூறுவர். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் பெரும்பாலானவை அறநூல்களே.

அறநூல்கள்

## TNPSC Old Questions
## பொதுத்தமிழ்

பதினெண் என்றால் (CCSE4GT/2024)
அ) 18
ஆ) 20
இ) 11
ஈ) 17
உ) விடை தெரியவில்லை

சங்க நூல்களுக்குப்பின் தோன்றிய நூல்களின் தொகுப்பு (EO3GT-2017)
அ) எட்டுத்தொகை
ஆ) பத்துப்பாட்டு
இ) பதினெண் கீழ்க்கணக்கு
ஈ) பதினெண் மேல்கணக்கு

### நாலடியார்

நாய்க்கால் சிறுவிரல்போல் நன்கணிய ராயினும்
ஈக்கால் துணையும் உதவாதார் நட்பென்னாம்
சேய்த்தானும் சென்று கொளல்வேண்டும் செய்விளைக்கும்
வாய்க்கால் அனையார் தொடர்பு.

5

பொருள் :

நாயின் கால்விரல்கள் நெருங்கி இருக்கும். அதுபோலச் சிலர் நம்மோடு நெருக்கமாக இருப்பார்கள். ஆனால், அவர்கள் ஈயின் கால் அளவும் நமக்கு உதவ மாட்டார்கள். அப்படிப்பட்டவர்கள் நட்பால் நமக்கு என்ன பயன்? வாய்க்கால், தொலைவிலுள்ள நீரைக் கொண்டுவரும்; அந்நீரை வயலுக்குப் பாய்ச்சி விளைய

உதவும் வாய்க்காலைப்போல உதவும் மனிதர்கள் இருக்கிறார்கள். எவ்வளவு தொலைவில் இருந்தாலும் அவர்கள் நட்பை நாம் தேடிக்கொள்ளுதல் வேண்டும்.

### நான்மணிக்கடிகை

பழகு → நான்மணிக்கடிகை
அறம் வகுப் பெயர்

விளம்பிநாகனார்
கடிகை → அணிகலன்

### நான்மணிக்கடிகை

நான்மணிக்கடிகை பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. கடிகை என்றால் அணிகலன் என்பது பொருள். நான்கு மணிகள் கொண்ட அணிகலன் என்பது இதன்பொருள். ஒவ்வொரு பாட்டும் நான்கு அறக் கருத்துகளைக் கூறுகின்றது. இந்நூலின் ஆசிரியர் பெயர் விளம்பி நாகனார். விளம்பி என்பது ஊர்ப்பெயர். நாகனார் என்பது புலவரின் இயற்பெயர்.

## TNPSC Old Questions
## பொதுத்தமிழ்

'விளம்பி' என்பது ______ பெயர் (EO3GT-2017)
அ) இயற்பெயர் ஆ) புனைபெயர்
இ) ஊர்ப்பெயர் ஈ) இறைவனின் பெயர்

நான்மணிக்கடிகையைப் பாடியவர் யார்? (SABT-2017)
அ) விளம்பி நாகனார் ஆ) கபிலர்
இ) முன்றுறை அரையனார் ஈ) கடுவெளிச் சித்தர்

'விளம்பி' என்பது ______ பெயர் (SABT-2017)
அ) இயற்பெயர் ஆ) புனைபெயர்
இ) ஊர்ப்பெயர் ஈ) சொலபெயர்

### நான்மணிக்கடிகை

மனைக்கு விளக்கம் மடவாள் மடவாள்
தனக்குத் தகைசால் புதல்வர் மனக்கினிய
காதல் புதல்வர்க்குக் கல்வியே கல்விக்கும்
ஓதின் புகழ்சால் உணர்வு

விளம்பிநாகனார்

பொருள் :

குடும்பத்தின் விளக்கு பெண்ணாவாள். அவள் அப்பெண்ணுக்கு விளக்கினைப் போன்றவர்கள் பண்பில் சிறந்த பிள்ளைகள். மனத்திற்கினிய அன்புமிக்க அப்பிள்ளைகளுக்கு விளக்கினைப் போன்றது கல்வி. அக்கல்விக்கு விளக்காக விளங்குவது அவர்களிடம் உள்ள நல்லெண்ணங்களே எதுவென்றால்.

## TNPSC Old Questions
## பொதுத்தமிழ்

கல்விக்கு விளக்காக விளங்குவது எதுவென்றால் அவர்களிடம் உள்ள ______ ஆகும் (CCS4T-2019)

அ) நற்பண்பு ஆ) நற்குணம்
இ) புகழ் ஈ) நல்லெண்ணங்கள்

"மனைக்கு விளக்கம் மடவாள் மடவாள்
தனக்குத் தகைசால் புதல்வர்........"
-இப்பாடல் ஆசிரியரைக் கண்டறிந்து எழுதுக.
(GT714 - 2014)
அ) **விளம்பி நாகனார்** ஆ) சமண முனிவர்
இ) முன்றுறை அரையனார் ஈ) நல்லாதனார்

## பழமொழி நானூறு

**புதுசு**

## விருந்தோம்பல்

ஏழாம் வகுப்பு - செய்யுள்

### பழமொழி நானூறு

- பழமொழி நானூறு பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இது நானூறு பாடல்களைக் கொண்டது.
- ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழி இடம் பெற்றிருப்பதால் இது பழமொழி நானூறு என்னும் பெயர்பெற்றது.

### முன்றுறை அரையனார்

- பழமொழி நானூறு நூலின் ஆசிரியர் முன்றுறை அரையனார் ஆவார்.
- இவர் கி.பி. (பொ.ஆ.) நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பர்.
- பழமொழி நானூறு நூலின் கடவுள் வாழ்த்துப் பாடல் மூலம் இவர் சமண சமயத்தைச் சேர்ந்தவர் என அறியமுடிகிறது.

### பழமொழி நானூறு
### - முன்றுறை அரையனார்

தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகளில் 'விருந்தோம்பல்' முதன்மையானதாகும். தமக்கு இல்லாவிட்டாலும் இருப்பதை விருந்தினருக்குத் தந்து மகிழ்ந்த நிகழ்வு களைத் தமிழ் இலக்கியங்கள் பேசுகின்றன. கடையெழு வள்ளல்களுள் ஒருவர் பாரி. அப்பாரியின் புதல்வியர் பாணர்களுக்குப் புதுமையாக உணவு அளித்த செய்தியைக் கூறும் பாடலை அறிவோம்.

மாரியொன்று இன்றி வறந்திருந்த காலத்தும்
பாரி மடமகள் பாண்மகற்கு - நீரஉலையுள்
பொன்திறந்து கொண்டு புகாவாக நல்கினாள்
ஒன்றுறா முன்றிலோ இல்

### பாடலின் பொருள்

மழையின்றி வறட்சி நிலவிய காலத்தில், பாரி மகளிரான அங்கவை, சங்கவை ஆகியோரிடம் பாணர்கள் இரந்து நின்றனர். பாரிமகளிர் உலைநீரில் பொன் இட்டு அவர்களுக்குத் தந்தனர். அதனால் பொருள் ஏதும் இல்லாத வீடு எதுவும் இல்லை என்பதை அறியலாம்.

இப்பாடலில் இடம் பெற்றுள்ள பழமொழி ஒன்றுறா முன்றிலோ இல் என்பதாகும். ஒன்றுமில்லாத வீடு எதுவுமில்லை என்பது இதன் பொருள்.

**பழசு**

## பழமொழி நானூறு

ஆறாம் வகுப்பு - செய்யுள்

### பழமொழி நானூறு

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று பழமொழி நானூறு. நானூறு பாடல்களைக் கொண்ட நூல் இது. இந்நூலின் ஒவ்வொரு பாடலிலும் ஒரு பழமொழி இடம்பெற்றுள்ளது. இப்பாடலில் வரும் பழமொழி, 'ஆற்றுணா வேண்டுவது இல்' என்பது. இதற்குக் 'கற்றவனுக்குக் கட்டுச்சோறு வேண்டா' என்பது பொருள்.

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

பொருத்தமான பழமொழியைக் கண்டறி 'கற்றவனுக்குக் கட்டுச்சோறு வேண்டா' (EO3GT-2017)
அ) ஞாயிறைக் கைமறைப்பார் இல்
ஆ) முள்ளினால் முள்களையும் ஆறு
**இ) ஆற்றுணா வேண்டுவது இல்**
ஈ) பாம்பு அறியும் பாம்பின் கால்

ஆற்றுணா வேண்டுவது இல் - இவ்வடியின் பொருள் (EO4GT-2017)
அ) கற்றவனுக்குச் சோறு வேண்டா
**ஆ) கற்றவனுக்குக் கட்டுச்சோறு வேண்டா**
இ) கற்றவனுக்குக் கட்டுச்சோறு வேண்டும்
ஈ) கல்லாதவனுக்குக் கட்டுச்சோறு வேண்டாம்

### முன்றுறை அரையனார்

பழமொழி நானூறு நூலின் ஆசிரியர் முன்றுறை அரையனார். முன்றுறை என்பது ஊர்ப்பெயர். அரையன் என்னும் சொல், அரசனைக் குறிக்கும். இவர் முன்றுறை என்ற ஊரை ஆண்ட அரசராக இருக்கலாம்; அல்லது அரையன் என்பது புலவரின் குடிப்பெயராகவும் இருக்கலாம்.

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

'முன்றுறை அரையனார்'- என்ற பெயரில் அரையனார் என்னும் சொல்லின் பொருள் (EO3GT-2017)
அ) ஊர் **ஆ) அரசன்**
இ) ஆறு ஈ) நாடு

### பழமொழி நானூறு
### கல்வியின் சிறப்பு

ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை அந்நாடு

வேற்றுநாடு ஆகா; தமவேயாம்; ஆயினால்
ஆற்றுணா வேண்டுவது இல்
- முன்றுறை அரையனார்.

பொருள் : ஆற்றுணா - ஆறு + உணா; ஆறு - வழி, உணா - வழிநடை உணவு. இதனைக் 'கட்டுச்சோறு' என இக்காலத்தில் கூறுவர். எந்நாட்டிற்குச் சென்றாலும், அந்நாட்டில் கற்றோரை வரவேற்று உணவு அளிப்பர் என்பது பாடல் உணர்த்தும் கருத்து.

பொருள்
கற்க வேண்டிய நூல்களை நிறைவாகக் கற்றவர் அறிவுடையவர் ஆவார். அவருடைய புகழ் நான்கு திசைகளிலும் பரவும். அவருடைய புகழ் பரவாத நாடு இல்லை. அந்த நாடுகள் எல்லாம் வேற்று நாடுகள் இல்லை; தம்முடைய நாடுகளே. எனவே, அந்நாடுகளுக்குச் செல்லும்போது வழிநடை உணவை அவர் எடுத்துச் செல்ல வேண்டிய தேவை இல்லை.

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

கற்றவனுக்குக் கட்டுச்சோறு வேண்டா"
எனக் கூறும் நூல் (GRFT3 - 2016)
அ) நான்மணிக்கடிகை
ஆ) பழமொழி நானூறு
இ) ஏலாதி
ஈ) திரிகடுகம்

கற்றவனுக்குக் கட்டுச் சோறு வேண்டாம்' என்று குறிப்பிடும் இலக்கியம் (GT112-2013)
அ) முதுரை
ஆ) பழமொழி நானூறு
இ) நாலடியார்
ஈ) நான்மணிக்கடிகை

கற்றவர்க்கு எல்லா நாடுகளும் தம்முடைய நாடுகளே" - என்ற கருத்தமைந்த பாடலைப் பாடிய சங்கப்புலவர் (GR5AT-2017)
அ) கணியன் பூங்குன்றனார்
ஆ) முன்றுறை அரையனார்
இ) கணிமேதாவியார்
ஈ) திருவள்ளுவர்

முதுமொழிக்காஞ்சி

பழகு

# முதுமொழிக்காஞ்சி
ஏழாம் வகுப்பு - செய்யுள்

**முதுமொழிக்காஞ்சி**

முதுமொழிக்காஞ்சி என்பது காஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான இந்நூல், உலகியல் உண்மைகளைத் தெளிவாக எடுத்து இயம்புகிறது. இந்நூல், அறவுரைக்கோவை எனவும் வழங்கப்படுகிறது. இதில் பத்து அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வோர் அதிகாரத்திலும் பத்துச் செய்யுள்கள் உள்ளன. இந்நூல் நூறு பாடல்களால் ஆனது. இந்நூலின் ஆசிரியர் மதுரைக் கூடலூர் கிழார்.

நூற்பயன் : முதுமொழிக்காஞ்சி கற்போரின் குற்றங்களை நீக்கி, அறம், பொருள், இன்பங்களை அடைவதற்கான வழிமுறைகளை அறவுரைகளாகக் கூறி நல்வழிப்படுத்தும்.

**மதுரைக் கூடலூர் கிழார்**

| | | |
|---|---|---|
| பிறந்த ஊர் | : | கூடலூர் |
| சிறப்பு | : | இவர்தம் பாடல்களை நச்சினார்க்கினியர் முதலிய நல்லுரையாசிரியர்கள் மேற்கோள்களாகக் கையாண்டுள்ளார்கள் |
| காலம் | : | சங்க காலத்துக்குப்பின் வாழ்ந்தவர் |

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

அறவுரைக்கோவை எனும் நூலில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை (EO4GT-2017)
அ) 1330
ஆ) 30
இ) 10
ஈ) 133

கீழே காணப்பெறுவனவற்றுள் சரியான கூற்றுகள் எவை? (G2AT16)

I. நிலையாமையைச் சொல்லும் காஞ்சித் திணையின் துறைகளில் ஒன்று. முதுமொழிக்காஞ்சி இப்பெயரில் மதுரைக் கூடலூர்க் கிழார் இயற்றிய நூல், அறவுரைக்கோவை என்றும் அழைக்கப்படுகிறது.
II. முதுமொழிக்காஞ்சியில் பதினொரு அதிகாரங்கள் உள்ளன
III. ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்துச் செய்யுட்கள் உள்ளன
IV. முதுமொழிக்காஞ்சியில் மொத்தம் நூற்றுப்பத்துச் செய்யுட்கள் உள்ளன. அவை நச்சினார்க்கினியர் முதலிய நல்லுரையாசிரியர்களால் மேற்கோளாக கையாளப்பட்டுள்ளன.

அ) I மற்றும் III சரியானவை
ஆ) I மற்றும் IV சரியானவை
இ) II மற்றும் III சரியானவை
ஈ) III மற்றும் IV சரியானவை

**முதுமொழிக்காஞ்சி**

**சிறந்த பத்து**

(சிறந்ததெனக் கூறப்படும் பத்துப் பொருளைத் தன்னகத்தே கொண்டிருப்பது சிறந்த பத்து)

ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலில் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை
காதலில் சிறந்தன்று கண்ணஞ்சப் படுதல்
மேதையில் சிறந்தன்று கற்றது மறவாமை
வண்மையில் சிறந்தன்று வாய்மை யுடைமை
இளமையில் சிறந்தன்று மெய்பிணி இன்மை
நலனுடை மையின் நாணுச் சிறந்தன்று.

குலனுடை மையின் கற்புச் சிறந்தன்று.
கற்றலின் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று.
செற்றாரைச் செறுத்தலில் தற்செய்கை சிறந்தன்று.
முன்பெரு கலின்பின் சிறுகாமை சிறந்தன்று.
- மதுரைக் கூடலூர்கிழார்.

**பொருள் :**

கடல்சூழ்ந்த இவ்வுலக மக்கள் அனைவர்க்கும் கற்றலைவிட ஒழுக்கமுடைமையே சிறந்தது. பிறர்க்கு அன்புகாட்டுவதிலும் செயல்களால் அவர் போற்றும்படி நடத்தலே மேலானது. அறிவுநுட்பத்தினும் கற்றபொருளை மறவாமை மேன்மையானது. வளமான வாழ்க்கையைக்காட்டிலும் வாய்மை உடையவராக வாழ்வது உயர்ந்தது. இளமையைக் காட்டிலும் நோயற்ற வாழ்வே சிறந்தது. அழகுடையவராக இருப்பதினும் நாணமுடையவராக இருப்பதே மேலானது. குலப்பெருமையைவிட ஒழுக்கமுடைமையே சிறந்தது. சிறந்த நூல்களைக் கற்றலைவிடவும் கற்றறிந்த பெரியாரைப் பின்பற்றி யொழுகுதல் சிறப்பானது. பகைவரைத் தண்டிப்பதனைவிட, அவருக்கு நன்மை செய்தல் சிறந்தது. முற்காலத்துப் பெருகிய செல்வத்தைப் பின்னர்க் குறைவுபடாமல் காத்தலே சிறந்தது.

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

"ஆர்கலி உலகத்து மக்கட்கெல்லாம் ஓதலில் சிறந்தன்(று) ஒழுக்கம் உடைமை" - இவ்வடிகள் இடம்பெற்றுள்ள நூல் (EO4GT-2017)

**அ) அறவுரைக் கோவை** ஆ) புறநானூறு
இ) நன்னெறி ஈ) நற்றிணை

"குலனுடைமையின் கற்புச் சிறந்தன்று" இடம்பெற்றுள்ள நூல் எது? (JGST-2017)

அ) நாலடியார் ஆ) ஏலாதி
இ) திரிகடுகம் **ஈ) முதுமொழிக்காஞ்சி**

"ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்"
- எனும் தொடர் இடம்பெற்றுள்ள நூல் எது? (GTPA-13 2014)

**அ) முதுமொழிக்காஞ்சி** ஆ) ஏலாதி
இ) இனியவை நாற்பது ஈ) இன்னா நாற்பது

மேதையில் சிறந்தகன்று என முதுமொழிக்காஞ்சி குறிப்பிடுவது (GT112-2013)

**அ) கற்றது மறவாமை** ஆ) ஒழுக்கம் உடைமை
இ) கண்ணஞ்சப் படுதல் ஈ) வாய்மை உடைமை

"ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கமுடைமை" என்று கூறும் நூல் (SSGT-2013)

அ) திருக்குறள் ஆ) சிறுபஞ்சமூலம்
**இ) முதுமொழிக் காஞ்சி** ஈ) ஆசாரக்கோவை

பொருத்தி தொடரைக் குறிப்பிடுக (CCST-2013)

| பட்டியல் I | | பட்டியல் II | |
|---|---|---|---|
| a) | ஓதலில் சிறந்தன்(று) | 1. | மெய்பிணி இன்மை |
| b) | வண்மையில் சிறந்தன்று | 2. | வாய்மையுடைமை |
| c) | மேதையில் சிறந்தன்று | 3. | ஒழுக்கமுடைமை |
| d) | இளமையில் சிறந்தன்று | 4. | கற்றது மறவாமை |

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| அ) | 2 | 3 | 1 | 4 |
| **ஆ)** | **3** | **2** | **4** | **1** |
| இ) | 1 | 2 | 3 | 4 |
| ஈ) | 4 | 3 | 2 | 1 |

## திரிகடுகம்

பழசு

**திரிகடுகம்**
ஏழாம் வகுப்பு - செய்யுள்

### திரிகடுகம்

திரிகடுகம், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூல் நூறு வெண்பாக்களை உடையது. சுக்கு, மிளகு, திப்பிலியால் ஆன மருந்துக்குப் பெயர் திரிகடுகம். இம்மருந்தை உண்ட மனிதர்களுக்கு உடல்நோய் நீங்கும். இதனைப்போன்றே ஒவ்வொரு திரிகடுகப் பாடலிலும் இடம்பெற்றுள்ள மூன்று கருத்தும் மக்களின் மனமயக்கத்தைப் போக்கித் தெளிவை ஏற்படுத்தும்.

**நூற் பயன் :** திரிகடுகம் பாடல்களிலுள்ள மூன்று அறக்கருத்தும் கற்பாரின் மனத்திலுள்ள அறியாமையாகிய நோயைப் போக்கி, அவரைக் குன்றின்மேலிட்ட விளக்காகச் சமுதாயத்தில் விளங்கச் செய்யும்.

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

திரிகடுகம் எனும் நூலின் வெண்பாக்களின் எண்ணிக்கை (EO3GS-2022)

**அ) 100 - வெண்பாக்கள்** ஆ) 102 - வெண்பாக்கள்
இ) 200 - வெண்பாக்கள் ஈ) 90 - வெண்பாக்கள்
உ) விடை தெரியவில்லை

'திரிகடுகம்' பற்றிய கூற்றுக்களில் பொருத்தமற்றதைக் குறிப்பிடுக (G2T-2015)

**அ) திரிகடுகம் நூற்று இரண்டு வெண்பாக்களைக் கொண்டது**
ஆ) திரிகடுகத்தின் ஆசிரியர் நல்லாதனார்
இ) திரிகடுகம் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று
ஈ) சுக்கு, மிளகு, திப்பிலியால் ஆன மருந்துக்குப் பெயர் திரிகடுகம்

### நல்லாதனார்

திரிகடுகத்தின் ஆசிரியர் நல்லாதனார். இவர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த திருத்து என்னும் ஊரினர் என்பர். இவரை, செருஅடுதோள் நல்லாதன் எனப் பாயிரம் குறிப்பிடுவதனால், இவர் போர்வீரராய் இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

## TNPSC Old Questions
## பொதுத்தமிழ்

... என்று நூலொன்று ஆசிரியர் – (CCSE2T/2024)
(A) கணிமேதாவியார்   (B) கம்பர்
(C) நல்லாதனார்   (D) இளங்கோவடிகள்
(E) விடை தெரியவில்லை

... செருவடுதோள் நல்லாதன் எனப் பாராட்டுவது
(AJGST-2017)
அ) தொல்காப்பியம்   ஆ) அகத்தியம்
இ) பாயிரம்   ஈ) நன்னூல்

### திரிகடுகம்
### தூயவர் செயல்கள்

உண்பொழுது நீராடி உண்டலும் என்பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலும் - தோல்வற்றிச்
சாயினும் சான்றாண்மை குன்றாமை இம்மூன்றும்
தூஉயம் என்பார் தொழில்.

பொருள் :
நீராடிய பின் உண்ணுதல், பெரும்பயன் கிடைத்தாலும் - பொய்ச்சாட்சி சொல்லாமல் இருத்தல், உடல்வாடித் தளர்ந்தபோதும் அறிவு ஒழுக்கங்களில் குன்றாது இருத்தல் ஆகிய இம்மூன்றும் மனம், மொழி, மெய்களால் தூய்மை உடையவரின் செய்கைகளாம்.

### அறவுணர்வு உடையாரிடத்து உள்ளவை

இல்லார்க்கொன் றீயும் உடைமையும், இவ்வுலகில்
நில்லாமை யுள்ளும் நெறிப்பாடும் - எவ்வுயிர்க்கும்
துன்புறுவ செய்யாத தூய்மையும் இம்மூன்றும்
நன்றறியும் மாந்தர்க் குள.

பொருள் :
வறியவர்க்குப் பொருளை அளித்தல், இவ்வுலகத்துப் பொருள்களின் நிலையாமையை அறிந்து நல்வழி நிற்றல், எவ்வுயிரையும் துன்புறுத்தாத நிலையில் வாழ்தல் என்னும் இம்மூன்றும் அறவழியில் நடக்கும் மக்களுக்கே என்றும் உண்டு.

### புதரில் விதைத்த விதை

முறைசெய்யான் பெற்ற தலைமையும் நெஞ்சில்
நிறையிலான் கொண்ட தவமும் - நிறைஒழுக்கம்
தேற்றாதான் பெற்ற வனப்பும் இவைமூன்றும்
தூற்றின்கண் தூவிய வித்து.

பொருள் :
அறம் தவறாது செயல்படும் ஆற்றல் இல்லாதவன் பெற்ற தலைமை, ஒழுக்கம் இல்லாதவன் மேற்கொண்ட தவம், மேலான ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்காதவன் பெற்ற அழகு ஆகிய இம்மூன்றும் புதரில் விதைத்த விதைபோன்று பயனற்றவையே.



புதுக

### சிறுபஞ்சமூலம்

[illegible]

### சிறுபஞ்சமூலம்

- தமிழில் சங்க இலக்கியங்களைத் தொடர்ந்து நீதிநூல்கள் தோன்றின. அவை பதினெண் கீழ்க்கணக்கு எனத் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று சிறுபஞ்சமூலம். ஐந்து சிறிய வேர்கள் என்பது இதன் பொருள்.
- அவை கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகியன.
- இவ்வேர்களால் ஆன மருந்து உடலின் நோயைப் போக்குகின்றது. அதுபோலச் சிறுபஞ்சமூலப் பாடல்களில் உள்ள ஐந்தைந்து கருத்துகள் மக்களின் அறியாமையைப் போக்கி நல்வழிப்படுத்துவனவாய் அமைந்துள்ளன.
- இப்பாடல்கள் நன்மை தருவன, தீமை தருவன, நகைப்புக்கு உரியன என்னும் வகையில் வாழ்வியல் உண்மைகளை எடுத்துக்காட்டுகின்றன.

## TNPSC Old Questions
## பொதுத்தமிழ்

'சிறுபஞ்சமூலம்' - என்பதில் 'பஞ்சமூலம்' என்பது எதைக் குறிக்கிறது? (CCS3T-2023)
அ) மூன்று வேர்கள்   ஆ) ஐந்து வேர்கள்
இ) நான்கு வேர்கள்   ஈ) ஆறு வேர்கள்
உ) விடை தெரியவில்லை

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகிய சிறுபஞ்சமூலத்தில் கூறப்படாத மூலிகைத் தாவரவேர் (AJGST-2019)
அ) கண்டங்கத்திரி   ஆ) சிறுவழுதுணை
இ) தூதுவளை   ஈ) நெருஞ்சி
உ) விடை தெரியவில்லை

### காரியாசான்

- சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் காரியாசான்.
- மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணாக்கர்.
- காரி என்பது இயற்பெயர்.
- ஆசான் என்பது தொழிலின் அடிப்படையில் அமைந்தபெயர்.
- மாக்காரியாசான் என்று பாயிரச் செய்யுள் இவரைச் சிறப்பிக்கிறது.

### சிறுபஞ்சமூலம் - காரியாசான்

மனித வாழ்வைச் செழுமையாக்குபவை அறப் பண்புகளே. காலந்தோறும் தமிழில் அறக் கருத்துகளைக் கூறும் இலக்கியங்கள் தோன்றிவருகின்றன. அவற்றுள் சிறுபஞ்சமூலம் என்னும் நூல் வயதுக்கும் ஒன்றுதான்

அறிவுக்கும் சில நேரங்களில் தொடர்பு இருப்பதில்லை சாதனைக்கு வயது ஒரு தடையில்லை

### அறிவுடையார் தாமே உணர்வர்

பூவாது காய்க்கும் மரமும் உள நன்று அறிவார்
மூவாது மூத்தவர் நூல் வல்லார் தாவா
விதையாமை நாறுவ வித்துஉள மேதைக்கு
உரையாமை செல்லும் உணர்வு

**பாடலின் பொருள்**

பூக்காமலே சில மரங்கள் காய்ப்பதுண்டு இதைப் போலவே நன்மை தீமைகளை நன்குணர்ந்தவர் வயதில் இளையவராக இருந்தாலும் அவர் மூத்தவரோடு வைத்து எண்ணத் தக்கவரே ஆவார். பாத்தி அமைத்து விதை விதைக்காமலே தானே முளைத்து வளரும் விதைகளும் உள்ளன அதைப் போலவே **மேதையரும் பிறர் உணர்த்தாமல் எதையும் தாமே உணர்ந்துகொள்வர்.**

அணி : பாடலில் எடுத்துக்காட்டு உவமையணி பயின்று வந்துள்ளது

சிறுபஞ்சமூலத்தின் ஒவ்வொரு பாடலிலும் ஐந்து கருத்துகள் இடம்பெற்றுள்ளன. அதுபோல, ஒரு பாடலில் மூன்று, ஆறு கருத்துகளைக் கொண்ட அறநூல்கள் பதினெண்கீழ்க்கணக்கு வரிசையில் அமைந்துள்ளன. அந்நூல்கள் திரிகடுகம், ஏலாதி.

**சாதனைக்கு வயது தடையன்று**

- 10 வயதிற்குள்ளாகவே சொற்பொழிவு நிகழ்த்தவும், பாடவும் ஆற்றல் பெற்றவர் **வள்ளலார்.**
- 11 ஆவது வயதிலேயே அரசவையில் கவிதை எழுதி 'பாரதி' என்னும் பட்டம் பெற்றவர் **பாரதியார்**
- 15 ஆவது வயதிலேயே பிரெஞ்சு இலக்கியக் கழகத்துக்குத் தமது கவிதைகளை எழுதியனுப்பியவர் **விக்டர் ஹியுகோ**
- 16 ஆவது வயதிலேயே தமது தந்தையின் போர்ப் படையில் தளபதியானவர் **மாவீரன் அலெக்சாண்டர்.**
- 17 ஆவது வயதிலேயே பைசா நகரச் சாய்ந்த கோபுரத்தின் விளக்கு ஊசலாடுவது குறித்து ஆராய்ந்தவர் அறிவியலாளர் **கலீலியோ**

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

பத்து வயதிற்குள்ளாகவே சொற்பொழிவு நிகழ்த்தவும் பாடவும் ஆற்றல் பெற்றவர் (CCS3T-2023)

அ) பாரதியார் ஆ) கம்பன்
இ) **வள்ளலார்** ஈ) பாரதிதாசன்
உ) விடை தெரியவில்லை

...

### சிறுபஞ்சமூலம்

**குளம்தொட்டுக் கோடு பதித்து வழிசீத்து**
**உளம்தொட்டு உழுவயல் ஆக்கி - வளம்தொட்டுப்**
**பாகுபடும் கிணற்றோடு என்று இவ்வைம் பாற்படுத்தான்**
**ஏகும் சொர்க்கத்து இனிது** (64)

## பழகு — சிறுபஞ்சமூலம்

ஒன்பதாம் வகுப்பு - செய்யுள்

**சிறுபஞ்சமூலம்**

- சிறுபஞ்சமூலம் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
- இதன் ஆசிரியர் காரியாசான்.
- இந்நூலில், கடவுள் வாழ்த்துடன் தொண்ணூற்றேழு வெண்பாக்கள் உள்ளன.
- **கண்டங்கத்தரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்து மூலிகையின்** வேர்களும் உடல்நோயைத் தீர்ப்பன அதுபோல, இந்நூலின் ஒவ்வொரு பாடலிலும் கூறப்பட்டுள்ள ஐந்து கருத்தும் மக்கள் மனநோயைப் போக்குவன ஆகையால், இந்நூல் சிறுபஞ்சமூலம் எனப் பெயர் பெற்றது.

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

கண்டங்கத்தரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி - ஆகிய ஐந்து மூலிகையின் எப்பகுதி உடல்நோயைத் தீர்ப்பன (EO3GT-2017)

அ) இலை ஆ) **வேர்**
இ) பட்டை ஈ) காய்

சிறுபஞ்சமூலம் என்ற நூலில் கடவுள் வாழ்த்துடன் ________ வெண்பாக்கள் உள்ளன. (SABT-2017)

அ) தொண்ணூற்றொன்பது ஆ) **தொண்ணூற்றேழு**
இ) தொண்ணூற்றாறு ஈ) நூற்றெட்டு

நூலின் 97 வெண்பாவிலும் மனநோய் போக்கும் 5 கருத்துகள் கொண்டது (SABT-2017)

அ) மலைபடுகடாம் ஆ) **சிறுபஞ்சமூலம்**
இ) ஏலாதி ஈ) திரிகடுகம்

தவறான ஒன்றை தேர்க (HC2GST16)

அ) சிறுமல்லி ஆ) சிறுவழுதுணை
இ) பெருமல்லி ஈ) **ஏலம்**

சிறு பஞ்ச மூலத்தில் கடவுள் வாழ்த்துடன் எத்தனை வெண்பாக்கள் உள்ளன? (VGT-2016)

அ) தொண்ணூறு ஆ) **தொண்ணூற்றேழு**
இ) நூறு ஈ) ஐம்பது

**காரியாசான்**

- காரியாசான், மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணாக்கர் எனச் சிறப்புப்பாயிரம் கூறுகிறது
- இவர், சமண சமயத்தைச் சார்ந்தவர்.
- இவரும் கணிமேதாவியாரும் ஒருசாலை மாணாக்கராவர்.

பெரும்பான்மை பொது அறக்கருத்துகளும்
சிறுபான்மை சமண அறக்கருத்துகளும் இந்நூலில்
இடம்பெற்றுள்ளன.

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

சிறுபஞ்சமூலம் என்ற நூலை இயற்றிய ஆசிரியரின்
சமயம் (CCS2T-2018)
அ) இந்து சமயம்
இ) கிருத்துவ சமயம்
ஆ) சமண சமயம்
ஈ) பௌத்த சமயம்

காரியாசான் ______ ஒரு சாலை மாணாக்கராவர்
(CCST-2013)
அ) மதுரைக் கூடலூர் கிழார்
ஆ) கணிமேதாவியார்
இ) நல்லாதனார்
ஈ) திருவள்ளுவர்

## சிறுபஞ்சமூலம்

கண்வனப்புக் கண்ணோட்டம், கால்வனப்புச் செல்லாமை,
எண்வனப்பு இத்துணையாம் என்றுரைத்தல், -
பண்வனப்புக்
கேட்டார்நன் றென்றல், கிளர்வேந்தன் தன்னாடு
வாட்டான்நன் றென்றல் வனப்பு.
- காரியாசான்.

('கண்வனப்புக் கண்ணோட்டம்....' என்னும் சிறுபஞ்சமூலப் பாடலில் சொற்பொருள் பின்வருநிலையணி பயின்று வந்துள்ளது. இப்பாடலில் 'வனப்பு' என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்து 'அழகு' என்னும் பொருளைத் தருகின்றது.)

பொருள் :

கண்ணுக்கு அழகு இரக்கம் கொள்ளல்; காலுக்கு அழகு பிறரிடம் இரந்து செல்லாமை; ஆராய்ச்சிக்கு அழகு முடிவைத் துணிந்துரைத்தல்; இசைக்கு அழகு அதனைக் கேட்போர் நன்றெனப் புகழ்தல்; அரசனுக்கு அழகு குடிமக்களை வருத்தாமல் காப்பவன் என்று பிறர் அவனைப் புகழ்ந்து உரைத்தல்.

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

"கண்வனப்புக் கண்ணோட்டம், கால்வனப்புச் செல்லாமை"
இடம்பெற்றுள்ள நூல் (JGST-2017)
அ) திரிகடுகம்
இ) நான்மணிக்கடிகை
ஆ) நாலடியார்
ஈ) சிறுபஞ்சமூலம்

'கண் வனப்புக் கண்ணோட்டம்.
கால் வனப்புச் செல்லாமை' - என உறுப்பழகு பாடியவர்
(JGST-2017)
அ) பரணர்
இ) காரியாசான்
ஆ) கபிலர்
ஈ) முடியரசன்

பட்டியல் I ல் உள்ள சொற்றொடரைப் பட்டியல் II ல் உள்ள தொடர்களுடன் பொருத்தி குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு
(GROUP 4 - 2013)

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| a) கண் வனப்பு | 1. செல்லாமை |
| b) எண் வனப்பு | 2. இத்துணையாம் |
| c) பண் வனப்பு | 3. கண்ணோட்டம் |
| d) கால் வனப்பு | 4. கேட்டார் நன்றென்றல் |

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| அ) | 3 | 2 | 4 | 1 |
| ஆ) | 3 | 1 | 2 | 4 |
| இ) | 1 | 2 | 4 | 3 |
| ஈ) | 2 | 3 | 4 | 1 |

## ஏலாதி

பழகு

**ஏலாதி**
பத்தாம் வகுப்பு - செய்யுள்

### ஏலாதி

- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஏலாதியும் ஒன்று.
- இந்நூல் சிறப்புப் பாயிரம், தற்சிறப்புப் பாயிரம் உட்பட எண்பத்தொரு வெண்பாக்களைக் கொண்டுள்ளது.
- நான்கடிகளில் ஆறு அருங்கருத்துகளை இந்நூல் நவில்கிறது.
- இந்நூல் தமிழருக்கு அருமருந்து போன்றது.
- ஏலம் என்னும் மருந்துப்பொருளை முதன்மையாகக் கொண்டு இலவங்கம், சிறுநாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றினால் ஆன மருந்துப் பொருளுக்கு ஏலாதி என்பது பெயர்.
- இம்மருந்து உண்ணுபவரின் உடற்பிணியைப் போக்கும். அதுபோல, இந்நூலின் நற்கருத்துகள், கற்போரின் அறியாமையை அகற்றும்.
- இந்நூலின் ஐம்பத்தொன்பதாவது பாடல், நமக்குப் பாடமாக அமைந்துள்ளது.

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

ஏலாதி - எந்த நூல் வகையைச் சார்ந்தது? (GTGS-2022)
அ) பதினெண்கீழ்க்கணக்கு
இ) ஐம்பெருங்காப்பியம்
உ) விடை தெரியவில்லை
ஆ) ஐஞ்சிறுகாப்பியம்
ஈ) பதினெண் மேற்கணக்கு

ஏலாதி ______ வெண்பாக்களைக் கொண்டுள்ளது
(JGST-2017)
அ) எழுபத்தொரு
இ) ஐம்பத்தொரு
ஆ) எண்பத்தொரு
ஈ) முப்பத்தொரு

ஏலாதி - நூல்களுள் ஒன்று (EO3GT-2017)
அ) பதினெண் மேற்கணக்கு
ஆ) பதினெண்கீழ்க்கணக்கு

இ) காப்பியம்
ஈ) பாயிரம்

'ஏலாதி' பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் சரியானவை எவை? (G2T-2015)

I. பாடல்தோறும் ஆறு கருத்துகளை விளக்கிக் கூறும் அற இலக்கியம், 'ஏலாதி'
II. 'ஏலாதி' நூல் தற்சிறப்புப்பாயிரம் சிறப்புப்பாயிரம் உட்பட நூறு செய்யுட்களைக் கொண்டது
III. ஏலக்காய், இலவங்கம், சிறுநாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் ஆறு பொருள்கள் சேர்ந்த மருந்து உடல்பிணி போக்கி நலம் செய்யும்
IV. அதுபோல் ஏலாதியில் ஒவ்வொரு செய்யுளிலும் சொல்லப்பட்ட எட்டு கருத்துகளும் மக்களது மனநோயாகிய அறியாமையைப் போக்கித் தெளிவு தருவன

அ) II மற்றும் III
ஆ) I மற்றும் III
இ) III மற்றும் IV
ஈ) I மற்றும் IV

---

**கணிமேதாவியார்**

- ஏலாதியை இயற்றியவர் கணிமேதாவியார். இவருக்கு கணிமேதையர் என்னும் மற்றொரு பெயருமுண்டு.
- இவர், சமண சமயத்தவர் என்பர். இவர், சமண சமயத்திற்கே உரிய கொல்லாமை முதலான உயரிய அறக்கருத்துகளை ஏலாதியில் வலியுறுத்திக் கூறுகிறார். இவர் காலம் கி.பி.ஐந்தாம் நூற்றாண்டு.
- இவர், திணைமாலை நூற்றைம்பது என்னும் நூலையும் இயற்றியுள்ளார்.

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

கணிமேதாவியார் எந்தச் சமயத்தைச் சார்ந்தவர் (EO3GS-2022)

அ) சைவம்
ஆ) சமணம்
இ) வைணவம்
ஈ) பௌத்தம்
உ) விடை தெரியவில்லை

---

## ஏலாதி

வணங்கி வழியொழுகி மாண்டார்சொல் கொண்டு
நுணங்கிநூல் நோக்கி நுழையா - இணங்கிய
பால்நோக்கி வாழ்வான் பழியில்லா மன்னனாய்
நூல்நோக்கி வாழ்வான் நுனித்து.
- கணிமேதாவியார்

சொற்பொருள் : வணங்கி - பணிந்து; மாண்டார் - மாண்புடைய சான்றோர்; நுணங்கிய நூல் - நுண்ணறிவு நூல்கள்; நோக்கி - ஆராய்ந்து

**பொருள்:**

பிறர்க்குப் பணிந்தும், நல்வழியில் நடந்தும், மாண்புடைய சான்றோர் அறிவுரைகளைப் பின்பற்றியும், நுண்ணறிவு நூல்களை ஆராய்ந்தும், அவை நவிலும்வண்ணம் வாழும் பழியிலா மன்னன் நூல்களெல்லாம் போற்றும்படி வாழ்வான்.

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

பழியில்லா மன்னன், யார் / எது போற்றும்படி வாழ்வான்? (GR5AT-2017)

அ) மக்கள்
ஆ) அமைச்சர்
இ) பிறநாட்டரசர்
ஈ) நூல்கள்

---

## புத்தகப் பயிற்சி வினாக்கள்

பண்ணுக்கு அழகு ________ நன்றென்றல்.

அ) கேட்டார்
ஆ) அரசர்
இ) புலவர்
ஈ) குழந்தை

விடை : அ)

பிறரிடம் இரந்து செல்லாமை ________ அழகு.

அ) கண்
ஆ) கால்
இ) கை
ஈ) வாய்

விடை : ஆ)

ஏலாதி ________ நூல்களுள் ஒன்று.

அ) பதினெண்மேற்கணக்கு
ஆ) பதினெண்கீழ்க்கணக்கு
இ) காப்பியம்
ஈ) சிற்றிலக்கியம்

விடை : ஆ)

கணிமேதாவியாரின் காலம் ________

அ) கி.பி.மூன்றாம் நூற்றாண்டு
ஆ) கி.பி.நான்காம் நூற்றாண்டு
இ) கி.பி.ஐந்தாம் நூற்றாண்டு
ஈ) கி.பி.ஆறாம் நூற்றாண்டு

விடை : இ)

மருந்துப் பொருள்களின் பெயரில் அமைந்த இரு நூல்கள்

அ) திருக்குறள், நன்னூல்
ஆ) திரிகடுகம், ஏலாதி
இ) நற்றிணை, அகநானூறு
ஈ) நாலடியார், ஆசாரக்கோவை

விடை : ஆ)

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

மருந்துப் பெயரில் அமைந்த இரு நூல்கள்? (GTGS-2022)

அ) திருக்குறள் - நாலடியார்
ஆ) திரிகடுகம் - ஏலாதி
இ) அகநானூறு - புறநானூறு
ஈ) நற்றிணை - குறுந்தொகை

உ) விடை தெரியவில்லை

மருந்துப் பொருள்களின் பெயரில் அமைந்த இரு நூல்கள் (GROUP-IV... EO3GT-2017)

அ) திரிகடுகம், ஏலாதி
ஆ) இன்னாநாற்பது, இனியவை நாற்பது
இ) திருக்குறள், நன்னூல்
ஈ) நற்றிணை, அகநானூறு

## ஔவையார் பாடல்கள்

புதுசு

## மூதுரை

ஆறாம் வகுப்பு - செய்யுள்

### மூதுரை

- மூதுரை என்னும் சொல்லுக்கு மூத்தோர் கூறும் அறிவுரை என்பது பொருள்.
- சிறந்த அறிவுரைகளைக் கூறுவதால் இந்நூல் மூதுரை எனப் பெயர் பெற்றது.
- இந்நூலில் முப்பத்தொரு பாடல்கள் உள்ளன.

### ஔவையார்

- மூதுரை நூலின் ஆசிரியர் ஔவையார்.
- இவர் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி போன்ற நூல்களையும் இயற்றியுள்ளார்.

**TNPSC Old Questions**
**கட்டாயத் தமிழ்**

மூதுரை குறித்த கூற்றுகளில் தவறான கூற்றைக் கண்டறிக. (VCGS/2022)

அ) மூதுரை என்னும் சொல்லுக்கு மூத்தோர் கூறும் அறிவுரை என்பது பொருள்
ஆ) இந்நூலின் முப்பத்தொரு பாடல்கள் உள்ளன
இ) கற்றவரை விட மன்னரே சிறந்தவர் ஆவார்
ஈ) மன்னனை விட கற்றவரே சிறந்தவர் ஆவார்

### மூதுரை
### - ஔவையார்

கல்விக்கு எல்லை இல்லை. மனிதன் பிறந்தது முதல் இறுதிவரை கற்றுக்கொண்டே இருக்கிறான். கல்வி மனிதனை உயர்த்துகிறது. கல்வியும் செல்வமாகக் கருதத் தக்கது. அது பிறருக்குத் தந்தாலும் குறையாமல் வளரும். கல்வியைப் பிறரால் கைப்பற்றவோ அழிக்கவோ முடியாது. அழியாச் செல்வமாகிய கல்வியைக் கற்றவன் எங்கும் எப்போதும் சிறப்புப் பெறுவான். எனவே, நாமும் கற்போம்; வளம்பெறுவோம்.

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனின் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு.

பாடலின் பொருள்

மன்னனையும் குற்றம் இல்லாமல் கற்றவனையும் ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்தால் மன்னனைவிடக் கற்றவரே சிறந்தவர் மன்னனுக்குத் தன் நாட்டில் மட்டுமே சிறப்பு கல்வி கற்றவர்க்குச் சென்ற இடங்களில் எல்லாம் சிறப்பு.

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

'மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின் மன்னனின் கற்றோன் சிறப்புடையன்' இப்பாடல் வரிகள் இடம்பெற்ற நூல் (CCS4T-2022)

அ) ஆத்திச்சூடி
ஆ) கொன்றைவேந்தன்
இ) நல்வழி
ஈ) மூதுரை
உ) விடை தெரியவில்லை

'மன்னற்கு தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்ற பாடல் இடம்பெற்ற நூல் எது? (GTGS-2022)

அ) மூதுரை
ஆ) பழமொழி நானூறு
இ) திருக்குறள்
ஈ) நாலடியார்
உ) விடை தெரியவில்லை

'மன்னனுக்குத் தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச் சென்றவிட மெல்லாஞ் சிறப்பு' இப்பாடலடிகளை இயற்றிய புலவர் (SGHGT-2017)

அ) திருவள்ளுவர்
ஆ) ஔவையார்
இ) பட்டினத்தார்
ஈ) காளமேகப்புலவர்

பழசு

## கல்விக்கு எல்லை இல்லை

ஏழாம் வகுப்பு - செய்யுள்

### ஔவையார்

இங்குக் குறிக்கப்படும் ஔவையார், சங்க கால ஔவையாருக்கு மிகவும் பிற்பட்டவர். கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்திப்புலவர் முதலிய புலவர்கள் இவர் காலத்தில் வாழ்ந்ததாகக் கூறுவர்.

### கல்விக்கு எல்லை இல்லை

கற்றதுகைம் மண்ணளவு கல்லா(து) உலகளவென்(று)
உற்ற கலைமடந்தை ஓதுகிறாள் - மெத்த
வெறும்பந் தயம்கூற வேண்டா; புலவீர்
எறும்புந்தன் கையால்எண் சாண்.

- ஔவையார்

பொருள் :

புலவர்களே! இதுவரை நாம் படித்தது கைம்மண்ணளவே. இன்னும் படிக்க வேண்டியவை உலகளவு என நினைத்து கலைமகளே இன்றளவும் படித்துக்கொண்டே இருக்கிறாள். ஆதலால், மிகுதியாகப் படித்துவிட்டோம் என்னும் செருக்குடன் வீண் வல்லமை பேசுதல் வேண்டா. சிறு எறும்பும் அதன் கையினால் எண் சாண் உடையதே.

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

"சிறு எறும்பும் அதன் கையினால் எண் சாண் உடையதே" என்றவர் (EO4GT-2019)

அ) பரணர் ஆ) பொய்யில் புலவர்
இ) செம்புலப்பெயல் நீரார் ஈ) ஔவையார்

"கற்றதுகைம் மண்ணளவு" - என்று கூறியவர் (HC2GST16)

அ) கபிலர் ஆ) கம்பர்
இ) பரணர் ஈ) ஔவையார்

"எறும்பும் தன்கையில் எண் சாண்" - எனப்பாடியவர் (GT112-2013)

அ) கபிலர் ஆ) ஒட்டக்கூத்தர்
இ) ஔவையார் ஈ) புகழேந்தி

---

"பாடுபட்டுத் தேடிய பணத்தைப் புதைத்து வைக்காதீர்" என்பது ஔவையாரின் அறிவுரை. 6n

இயல்வது கரவேல்
ஈவது விலக்கேல்

- ஔவையார் 7o